European Asylum, Migration and Integration Fund

European Reintegration Network

International Organization for Migration (IOM)
Organisation internationale pour les migrations (OIM)
Internationale Organisatie voor Migratie (IOM)

# ஐரோப்பிய மீளிணைதல் வலைப்பின்னலின் (ERIN) தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்திற்கான துண்டுப்பிரசுரம்

## ஸ்ரீலங்கா

ஓஸ்ட்ரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், இத்தாலி, லக்ஸம்பேர்க், மோல்டா நெதர்லாந்து, நோர்வே, ரொமேனியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து திரும்பும் ஸ்ரீலங்கா பிரஜைகளுக்கு, அவர்கள் நாட்டை வந்தடைந்த பின்னர், மீளிணைதலுக்கான உதவி

### விண்ணப்பமும் தகுதியுடைமையும்

ஓஸ்ட்ரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், இத்தாலி, லக்ஸம்பேர்க், மோல்டா நெதர்லாந்து, நோர்வே, ரொமேனியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் ஸ்ரீலங்கா பிரஜைகள், ERIN மூலமான நன்மைகளை பெறுவதற்கு விரும்பினால், அவர்கள் தங்கவைக்கப்பட்டிருக்கும் ERIN பங்காளர் நாட்டிலுள்ள தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்தின் தொடர்பாளர் ஊடாக சிகழ்ச்சித் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம், அல்லது அவர்கள் சொந்த நாட்டிற்கு திரும்பிய பின்னர் நாட்டிலுள்ள புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்திற்கு (IOM) விண்ணப்பிக்கலாம்.

இந்த செயல்திட்டத்துக்கான தகுதி குறிப்பிட்ட பொறுப்பான ERIN பங்காளர் நிறுவனத்தால் (EPI) பிரயாணத்துக்கு முன்னராக தீர்மானிக்கப்படலாம், அல்லது குறிப்பிட்ட பிரஜை தனது நாட்டிற்கு திரும்பியவுடன் EPIஆல் உறுதிப்படுத்தப்படலாம். இந்த உறுதிப்படுத்தலை மேற்கொள்வதற்காக, நாட்டிலுள்ள IOM நிறுவனத்துடன் இயலுமானவரைவில் திரும்புபவர் தொடர்புகொள்ள வேண்டும். IOM ERIN பிரதான நபர் EPIயுடன் தொடர்புகொள்ள அவர் ஒரு உறுதிப்படுத்தும் பரிசீலிப்புடன் அதனை செயல்முறைப்படுத்துவார். குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கான உங்களது தகுதியை EPI உறுதிப்படுத்தியதும், உங்களது மீளிணைதல் ஆதரவின் மூலம் IOM உங்களுக்கு உதவி வழங்க ஆரம்பிக்கும்.

## IOM பணிக்கூற்று

மனிதநேயமானதாகவும் முறைப்படி மேற்கொள்ளப்படுவதுமான புலம்பெயர்வு, குடியேற்றவாசிகளுக்கும் சமூகத்திற்கும் நன்மையளிக்கின்றது என்னும் கொள்கைக்கு IOM தன்னை அர்ப்பணித்துள்ளது. புலம்பெயர்தலை அரசாங்கங்கள் நிர்வகிப்பதற்கும் புலம்பெயர்வு செயல்முறைகளில் புலம்பெயர்வாளர்களுக்கு உதவுவதற்காகவுமென 1951ஆம் ஆண்டு IOM ஸ்தாபிக்கப்பட்டது. இன்று, உலகளாவிய அளவில் 165 அங்கத்துவ நாடுகளிலும், 481 அலுவலகங்களுடனும் புலம்பெயர்வு துறையில் முன்னணியில் IOM நிறுவனம் அரசாங்கங்களுடன் இணைந்து செயற்படுகின்றது. ஏனைய செயற்பாடுகளுக்கு மத்தியில், 30 வருடகாலமாக IOM அதன் “சுயவிருப்புடன் நாடு திரும்பல் மற்றும் மீளிணைதல் நிகழ்ச்சித் திட்டத்தின்” கீழ் உலகெங்கிலுமுள்ள புலம்பெயர்ந்தோர் தமது நாட்டிற்குத் திரும்புவதற்கும் ஒரு புதிய வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கும் IOM நிறுவனம் ஆதரவு வழங்குகிறது.

அதிகரித்துவரும் புலம்பெயர்தலுக்கான சவால்களுக்கு முகம் கொடுத்தல், புலம்பெயர்தல் பிரச்சனைகளை முன்னரே புரிந்து கொள்ளல், புலம்பெயர்தல் ஊடாக சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவித்து, புலம்பெயர்வாளர்களின் நலன் மற்றும் அவர்களுடைய உரிமைகளை உறுதிசெய்தல் போன்றவற்றிற்கு உதவுவதற்காக சர்வதேச சமூகத்திலுள்ள தனது பங்காளர்களுடன் இணைந்து IOM பணிபுரிகின்றது.

### வருகையும் மீளிணைதல் உதவியும்

மீளிணைதலுக்கான உதவி பொருளாக வழங்கப்படுவதுடன் (தேசிய பின்னிணைப்பில் வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி), அதனுடைய பெறுமதி அனுப்பும் நாட்டிட்கேற்பவும், தேசிய மீளிணைப்பு கொடைகள், மீள்திரும்பும் வகை மற்றும் பயனாளி விபரக்குறிப்பு அத்தோடு அவருடைய தேவைகள் ஆகியவற்றைப் பொறுத்து, தொகைகள் மாறுபடும். தனியாகப் பயணிக்கும் பராயமடையாதவர்களுக்கு மேலதிக மீளிணைதல் சேவைகள் வழங்கப்படும்.

நுண்பரிசீலிப்பு, மதிப்பீடு மற்றும் ERIN பங்காளர் நிறுவனங்களுடைய அனுமதியுடனும், அதேபோல் மீள்திரும்பலுக்குப் பின்னர் IOMஇனால மேற்கொள்ளப்படும் இனங்காணலுக்குப் பிறகு கீழ்வரும் சேவைகள் ஒவ்வொரு ERIN தனித்துவமான நடவடிக்கை செயல்திட்ட பயனாளிகளுக்கேற்ப கிடைக்கக்கூடியதாக இருக்கும்:

#### தனிநபர் அடிப்படையிலான விமானநிலைய வருகை உதவி

பயணத்துக்கு முன்னரான வேண்டுகோளின் பேரில் கீழ்வரும் சேவைகள் வழங்கப்பட முடியும்:

- சந்தித்து வரவேற்று அறிமுகப்படுத்தல்
- விமானநிலையத்துக்கு வெளியேயான பயணத்துக்கு உதவுதல்
- மருத்துவச் சிகிச்சை தொடர்வதற்கான அவசர மருத்துவ பராமரிப்புக்கான பரிந்துரைகள்.
- அவசரகால தற்காலிக தங்குமிடம்.

## மீளிணைதல் உதவி

நாடு பூராகவுள்ள IOM அலுவலகங்களிலுமுள்ள தகுதிவாய்ந்த IOM ஊழியர்களால், வருகையின் பிற்பாட்டு மீளிணைதல் ஆலோசனைகள் வழங்கப்படும். மீள்திரும்புபவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் IOM மீளிணைதல் ஆலோசகர்கள், மீளிணைதல் சாத்தியங்கள் பற்றி தகவல் வழங்கி, அவர்களுடைய மீளிணைதல் தந்திரோபாயத்தினை திட்டமிடுவதற்கு அவர்களுக்கு உதவுவதுடன், அவர்களுடைய தேவைகள் மற்றும் பின்னணியையும், கிடைக்கக்கூடிய வளங்களையும் (அதாவது தீர்மானிக்கப்பட்ட உதவித்தொகை, தனிநபர் ஆற்றல்கள் மற்றும் சமூக, பொருளாதார முதல்) கவனத்தில் கொண்டு, அவர்களுக்கான உதவியை ஆழமாக சிந்தித்து, ஆக்கபூர்வமான முறையில் எவ்விதம் செலவு செய்யவேண்டுமென திட்டமிடுவதற்கு அவர்களுக்கு உதவுவர்.

கீழ்வரும் மீளிணைதல் சேவைகளுக்காக மீளிணைதல் உதவி பயன்படுத்தப்பட முடியும்.

- பொருளாதார சுதந்திரம் மற்றும் வருமானம ஈட்டலுக்காக சிறிய தொழில் செயற்பாட்டை ஆரம்பித்தல், மீள ஆரம்பித்தல் அல்லது அதில் பங்காளராக இணைதல் ஆகியவற்றிற்கு உதவி வழங்கல்.
- தொழில் புரிதலை உற்சாகப்படுத்துவதற்காக வழங்கப்படும் சம்பள உதவித்தொகை: தனது பங்காளர் வலைப்பின்னல் ஊடாக IOMஆல் உங்களை சாத்தியமான தொழில்தருநர்களுடன் தொடர்புபடுத்த முடியும். உங்களுக்கு தொழிலொன்று கிடைத்தால், உங்களது மீளிணைதல் உதவித்தொகை, சம்பள உதவித்தொகையாக வழங்கும் அல்லது சம்பளத்திற்கு மேலதிகமான தொகையாக வழங்கப்படும்.
- திறன்களையும், தொழில் பெறக்கூடிய தன்மையையும் அதிகரிப்பதற்குமாக தொழில்சார் பயிற்சிக்கு ஆட்சேர்த்தல்: கிடைக்கக்கூடிய தன்மை, முந்தைய தொழில் அனுபவம், கல்வி, ஆர்வம், குறிப்பிட்ட திறன்களுக்கு நிலவும் உள்ளூர் சந்தைக் கிராக்கி ஆகியவற்றின் அடிப்படையில் பயிற்சிகள் இனங்காணப்படும்.
- உடனடியான முக்கியமான தேவைகளை பூர்த்திசெய்துகொள்வதற்காக தற்காலிக தங்குமிடம்
- மீள்திரும்பிய பின்னர் உங்களை உடல்நல பராமரிப்பு பெறுவதற்குரிய மருத்துவச் செலவுகள் (மருந்துகள், நிபுணர் ஆலோசனை)
- குழந்தைகள் கல்வி மற்றும் பாடசாலை செல்லும் செலவுகள் மேலும் அவர்களுக்குரிய நோய்த்தடுப்பு மருந்து மற்றும் மருத்துவப் பராமரிப்புக்கான செலவுகள்.
- நீங்கள் உள்ளூரில் உங்களை பதிவு செய்துகொள்ள உதவியாக சட்டசம்சார்ந்த/நிர்வாக செலவுகள்.

## நிர்வாகம்சார்ந்த ஆதரவு மற்றும் பரிந்துரைகள்

பின்வருவனவற்றை நிறைவேற்றுவதற்கு **IOM** உங்களுக்கு நிர்வாகம் சார்ந்த ஆதரவு மற்றும் பரிந்துரைகள் வழங்கும்:

- தேசிய, பிராந்திய, மற்றும் உள்ளூர் சேவைகள் (அரச, அரசசார்பற்ற, தனியார்துறை) முதலியன

- உள்ளூரில் தொழில் புரிவதற்கான ஆரம்ப முயற்சிகள்
- குறும்-நிதி நிறுவனங்கள்
- பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்த்தல்
- கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சி
- விஷேட மருத்துவ உதவி
- உளவியல்சார் உதவி: இலங்கை IOM ஊழியர்கள் இந்த துறையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்
- உள்ளூர் சமூக வலைப்பின்னல்
- சட்டம் சார்ந்த ஆலோசனை

நாடு திரும்பியதும் செயல்திட்ட பயனாளி கீழ்வரும் முகரியிலுள்ள **IOM** அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்:

**ERIN** இணையதளம்:
**http://erin-iom.belgium.iom.int**

**ERIN IOM** தொடர்பு மையம்: **SRI LANKA**

திரு. பிரியந்த குலதுங்க
நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்
தொடர்பு கொள்ளும் நேரம்: திங்கள் - வெள்ளி: 08:30-17:00
(ஸ்ரீலங்கா நேரம் - சர்வதேச திட்டநேரம் **GMT+**5.30)
மின்னஞ்சல்: MKULATUNGE@iom.int
தொலைபேசி: +94 11 5325310 தொலைநகல்: +94 11 5325 302

முகவரி:

புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம், 62, கிறீன் பாத், ஆனந்தகுமாரசாமி மாவத்தை
கொழும்பு-3, ஸ்ரீலங்கா

ஸ்ரீலங்கா பற்றிய மேலும் விபரங்களுக்கு **ERIN** தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்தின் அறிவுறுத்தல் குறிப்பை பார்வையிடுக

## ERIN தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்தின் அனுசரணையாளர்கள்

90 வீதமான ERIN திட்டத்தின் நிதி ஐரோப்பிய ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்றது. (ஐரோப்பிய புகழிடம், புலம்பெயர்வு மற்றும் மீளிணைதல் நிதியம்), அதேபோல் பதினெட்டு ஐரோப்பிய பங்காளர் நாடுகளாலும் (அதாவது ஒஸ்ட்ரியா, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், இத்தாலி, லக்ஸம்போர்க், மோல்டா நெதர்லாந்து, நோர்வே, ரொமேனியா, ஸ்பெய்ன், சுவீடன், சுவிட்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம்) நிதி வழங்கப்படுகின்றது.

## ERIN தனித்துவமான நடவடிக்கை செயல்திட்டத்தின் கொடையாளிகள்

| இல. | ERIN பங்காளர் நாடுகள் | S.N | ERIN பங்காளர் நிறுவனங்களும் |
|---|---|---|---|
| 1 | அவுஸ்திரேலியா | 1 | Ministry of Interior |
| 2 | ஒஸ்ட்ரியா | 2 | Department of Immigration and Border Protection |
| 3 | பெல்ஜியம் | 3 | Federal Immigration Office |
| | | 4 | Federal Agency for the Reception of Asylum Seekers |
| 4 | டென்மார்க் | 5 | Ministry of Foreign Affairs |
| 5 | பின்லாந்து | 6 | Finnish Immigration Service |
| 6 | பிரான்ஸ் | 7 | French Immigration and Integration Office |
| 7 | ஜெர்மனி | 8 | Federal Office for Migration and Refugees |
| 8 | கிரீஸ் | 9 | Ministry of Public Order and Citizen Protection |
| 9 | இத்தாலி | 10 | Ministry of Interior |
| 10 | லக்சம்பெர்க் | 11 | Ministry of European and Foreign Affairs |
| 11 | மோல்டா | 12 | Ministry for Home Affairs and National Security |
| 12 | நெதர்லாந்து | 13 | Repatriation and Departure Service |
| 13 | நோர்வே | 14 | Norwegian Directorate of Immigration |
| 14 | ரொமேனியா | 15 | General Inspectorate for Immigration |
| 15 | ஸ்பெய்ன் | 16 | Integration of Immigrants Migration Board |
| 16 | சுவீடன் | 17 | Swedish Migration Agency |
| 17 | சுவிட்சர்லாந்து | 18 | State Secretariat for Migration |
| 18 | ஐக்கிய இராச்சியம் | 19 | Home Office – Immigration Enforcement |